சி.சி.எண்.133/2020 நாள்: 17.09.2025

ம.சா.2- லெட்சுமணன், த/பெ.ராமசாமி

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. கடனுறுதி சீட்டில் என்ன எழுதியுள்ளேன் என்றால் குடும்ப தேவைக்காக, மளிகைக் கடை அபிவிருத்தி செய்வதற்காகவும், சில்லரை கடன்களை அடைப்பதற்காகவும் கடன் பெறுகிறார் என்று எழுதியுள்ளேன். மேலும் கடன் தொகை ரூ.3,00,000/- என்றும் தேதி குறிப்பிட்டு எழுதியுள்ளேன். கடனுறுதி சீட்டில் எத்தனை ரூபாய் வட்டி எழுதினேன் என்றால் ஞாபகமில்லை. பொதுவாக என் மருமகன் ரூ.1,00,000/- கடன் கொடுத்தால் ரூ.20,000/- வட்டி எடுத்துக் கொள்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார்தாரர் என் மருமகன்தான்.

2. நந்தகுமார் என்பவர் எங்கு கடை வைத்துள்ளார் என்றால் முள்ளிக்குண்டுவில் கடை வைத்துள்ளதாக விஜயா சொன்னார், எனக்கு நேரடியாக தெரியாது. ம.சா.1 கடைநோட்டு சீட்டில் நான் போட்டிருக்கும் மையும், விஜயா கையெழுத்திட்டு இருக்கும் மையும் வெவ்வேறாக உள்ளதா என்றால் சாட்சி அதை நான் எழுதவில்லை என்று கூறிவிட்டு பின்னிட்டு தான் எழுதிய கடனுறுதி சீட்டு தான் என்று சாட்சியம் அளிக்கிறார். புரோநோட்டில் நான் எழுதியிருக்கும் மையும், விஜயா கையொப்பமிட்டு இருக்கும் மையும் வெவ்வேறு மை என்றால் சாட்சி தன் பார்வை சரியாக தெரியவில்லை என்றும், அதை பார்த்து கூற முடியவில்லை என்றும் கூறினார்.

3. காசோலை நிரப்பிய கையெழுத்து யாருடையது என்று தெரியுமா என்றால் காசோலை நிரப்பிய விவரமே எனக்கு தெரியாது. பணம் வாங்கிய நாளன்று புரோநோட்டு விஜயா கொண்டு வந்தாரா இல்லை என் மருமகன் வைத்திருந்தாரா என்றால் அதுபற்றி எல்லாம் எனக்கு தெரியாது. எவ்வளவு வட்டி என்று தெரியாமல் நான் கடனுறுதி சீட்டு எழுதியிருக்க வாய்ப்பில்லை என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி எந்த புரோநோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எதிரியின் மகனிடம் புகார்தாரர் அவர் கடைக்கு சென்று ரூ.10,000/- பணம் கொடுத்து வட்டியாக ரூ.2000/- எடுத்துக் கொண்டு பிறகு அவர் தினசரி ரூ.100 வீதம் 100 நாட்கள் வசூல் செய்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேப்போல் ரூ.10,000/- மற்றும் ரூ.15,000/- புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்து அதை வசூல் செய்துவிட்டார் என்றால் அதுபற்றி விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி தொகைகளை பெறும் போது அவற்றுக்கு ஆதரவாக எதிரி எழுதப்படாத காசோலையை வைத்துதான் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் மருமகன் என்பதால் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.